# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 0444 /2016

ஆணை எண்: 122 /2016

நாள்: 12 / 07 /2016

ஊர் பொதுமக்கள்,
அரவக் குறிச்சி,
கரூர் மாவட்டம் — மனுதாரர்

செயல் அலுவலர்,
அரவக்குறிச்சி பேரூராட்சி,
கரூர் மாவட்டம் –639 201 — எதிர் மனுதாரர்

ஊர் பொதுமக்கள், அரவக்குறிச்சி பேரூராட்சி, கரூர் மாவட்டம் என குறிப்பிடப்பட்ட நாளிடாத புகார் மனு பேரூராட்சி இயக்குநரின் 17.05.2016 நாளிட்ட கடிதம் வாயிலாக உரிய விசாரணை மற்றும் நடவடிக்கைக்காக இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 0444/2016 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்படி முறையீடு தொடர்பாக உரிய ஆவணங்கள், விசாரணைகள் மற்றும் வாக்குமூலங்கள் பரிசீலிக்கப்பட்டு அவற்றின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு இம்முறை மன்ற நடுவத்தால் ஆணையிடப்படுகிறது.

## ஆணை

கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி பேரூராட்சி ஊர் பொதுமக்களின் நாளிடப்படாத மனுவில் பின்வருமாறு தெரிவித்துள்ளனர்.

2011–2012–ம் ஆண்டிற்கான அரவக்குறிச்சி பேரூராட்சி பணிகளில் மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் மகன் செல்வராஜ் என்பாருக்கு ஒப்பந்த பணிகள் கொடுக்கப்பட்டுள்ளது எனவும், நிர்வாக அதிகாரியும் பேரூராட்சி தலைவரும் அங்கீகரிக்கப்படாத வீட்டு மனைகளை ஒழுங்குபடுத்துவதாக கூறிக்கொண்டு அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுத்தி உள்ளார் எனவும் தெரிவித்துள்ளார்.

வாங்காலம்மன் எலக்ட்ரிக்கல்ஸ் கடை பெயரிலும், மற்றும் பல கடைகளின் பெயரிலும் போலி பில் போட்டு பணத்தை கையாடல் செய்துள்ளார்கள் எனவும், அதிகார மிகுதியில் பேசுவதாகவும் தெரிவித்துள்ளார். மேலும், துப்பரவு பெண்களை நிறுத்திவிட்டு ஐந்து நபர்களுக்கு ரூ.80,000/– வீதம் 4 லட்சம் ரூபாயை பெற்றுக்கொண்டு ஆண் துப்பரவு பணியாளர்களை நியமித்துள்ளனர் எனத் தெரிவித்துள்ளார். ஏ.பி.ஆர். காம்ப்ளக்ஸ் ரூம்களுக்கு வரி விதிக்கவில்லை என்றும், மற்றவர்களுக்கு அமைச்சர் பெயரை பயன்படுத்தி காண்ட்ராக்ட் விடுவதாகவும் தக்க நடவடிக்கை எடுத்திடவும் கேட்டுள்ளார்கள்.

ஊர்ப் பொதுமக்களின் முறையீடு சம்பந்தமாக அரவக்குறிச்சி செயல் அலுவலரிடம் விளக்க அறிக்கை கோரப்பட்டது. 15.06.2016 நாளிட்ட பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

அரவக்குறிச்சி பேரூராட்சியில் நடைபெறும் அனைத்து நிர்வாகம் தொடர்பான நடவடிக்கைகளும் சென்னை பேரூராட்சிகளின் இயக்குநர், மாவட்ட ஆட்சித்தலைவர் கரூர், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், திண்டுக்கல் ஆகியோர்களால் வழங்கப்படும் அறிவுரைக்கேற்பவே நடைபெறுகிறது.

மேலும், திட்டப்பணிகளை தேர்வு செய்வது தொடர்பான நடவடிக்கைகள் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் ஆலோசனை மற்றும் கருத்துக்களின்படி சட்ட விதிகளுக்குட்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு பேரூராட்சிகளின் இயக்குநருக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டு உரிய நிர்வாக அனுமதி பெறப்பட்டு நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு விதிமுறைகளின்படி திறந்த ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பேரூராட்சி மன்றத்தில் உரிய அங்கீகாரம் பெறப்பட்ட பின்பு, தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களுக்கு பணி மேற்கொள்வதற்கான உத்தரவுகள் வழங்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

ராஜபுரம் – கொத்தப்பாளையம் வரை தார்சாலை பணி தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாடு திட்டம் 2011–2012 –ன் படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தபுள்ளிகள் பதிவேற்றம் செய்யப்பட்டு நாளிதழ்களில் , மாவட்ட ஒப்பந்தப்புள்ளி மலரில் விளம்பரம் செய்யப்பட்டு திறந்த முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்பந்ததாரர்களுடைய தொழில்நுட்ப தகுதிகள் ஆய்வு செய்யப்பட்டு, தொழில்நுட்ப தகுதியில் தகுதி பெற்ற ஒப்பந்ததாரர் திரு.எஸ்.செல்வராஜ் என்வருக்கு பணி ஆணை வழங்கப்பட்டது.

நபார்டு திட்டத்தின்கீழ் கரூர் ரோடு முதல் கொத்தப்பாளையம் வரை தார்சாலை அமைத்தல் பணி ஒப்பந்ததாரர் எஸ்.தாமோதரன் என்பாருக்கு வழங்கப்பட்டுள்ளது. வடிகால் அமைத்தல் பணி பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களால் விளம்பரம் செய்யப்படும் பேரூராட்சி நிர்வாகம் சார்பாக உரிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்த நபர்களின் விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் எஸ்.செல்வராஜ்க்கு இப்பேரூராட்சி மன்ற தீர்மான எண்.65 நாள்.22.02.2012 –ன் படி அங்கீகாரம் பெறப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டது.

பேரூராட்சியின் பொதுசுகாதாரம், தெருவிளக்கு பராமரிப்பு, குடிநீர் திட்ட பராமரிப்பு ஆகிய பணிகளுக்கு தேவைக்கேற்ப பணியாளர்களால் கோரப்படும் அளவிற்கு பொருள்கள் கொள்முதல் செய்யப்பட்டு தேவையான இடங்களில் பயன்படுத்தப்பட்டு, உரிய பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டு அதன் பின்னரே தொகை வழங்கப்படுகிறது. நியூ வாங்காலம்மன், பகவதி அம்மன் போன்ற எந்த ஒரு நிறுவனத்திற்கும், எந்த ஒரு தொகையும் வழங்கப்படவில்லை.

ஆர்.ஆர்.டிரேடர்ஸ் மற்றும் செந்தூர் எண்டர்பிரைசஸ் நிறுவனங்கள் 2011–2012 ஆம் ஆண்டிற்கு ஆண்டு ஒப்பந்தப்படி பொது சுகாதார பொருட்கள் சுகாதார பராமரிப்புக்கு சப்ளை

செய்கின்றனர். கொள்முதல் செய்யப்படும் பொருள்களுக்கு மட்டுமே தொகை வழங்கப்படுகிறது. தொகை வழங்கப்பட்டதற்கு அந்தந்த மாதத்தின் அடுத்த மாதத்தில் நடத்தப்படும் மன்றக் கூட்டத்தில் உரிய ஒப்புதல் அனைத்து மன்ற உறுப்பினர்களாலும் வழங்கப்படுகிறது.

இச்செலவினங்கள் வழங்கியதில் எந்த விதி மீறல்களோ முறைகேடுகளோ இல்லை. புகாரில் தெரிவிக்கப்பட்டது ஆதாரமற்ற குற்றச்சாட்டு ஆகும் எனத் தெரிவித்துள்ளார்.

பேரூராட்சி மன்ற கூட்டமானது பேரூராட்சி தலைவரால் நடத்தப்படுவதாகும். இக்கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்களை படிக்க பேரூராட்சியின் ஏதாவது ஒரு பணியாளர் பேரூராட்சி மன்ற தலைவரால் அழைக்கப்படுகிறார். இந்த பணியாளர் தான் மன்ற பொருள்களை படிக்க வேண்டும் என்ற விதிகள் ஏதும் இல்லை. பேரூராட்சி மன்ற தலைவர், உபதலைவர் மற்றும் உறுப்பினர்கள் ஆகியார்வர்களின் அழைப்பின் பெயரில் செயல் அலுவலர், பேரூராட்சி பணியாளர்கள் விளக்கங்களும் விபரங்களும் கூற அழைக்கப்படுகின்றனர். பெரும்பாலும் செயல் அலுவலரும், இளநிலை உதவியாளரும் கூட்டத்தில் கலந்து கொள்கின்றனர். 19.06.2012 அன்று திண்டுக்கல் மண்டல பேரூராட்சிளின் உதவி இயக்குநர் அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டி இருந்ததாலும், இன்றைய உதவியாளர் தற்செயல் விடுப்பிலும், வரித்தண்டலர் மருத்துவ விடுப்பிலும் சென்று விட்டதாலும், குடிநீர் பணியாளர் திரு.சு.கோபி என்பவரால் மன்றபொருள்கள் படிக்கப்பட்டது. இதில் முறைகேடுகளோ, விதிமீறல்களோ இல்லை என்ற விபரத்தை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அலுவலக வேலை நாட்களில் அலுவலகப் பணிகள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களால் நடத்தப்படும் ஆய்வுக்கூட்டங்களில் கலந்து கொள்ளுதல் தவிர, செயல் அலுவலரால் வேறு பணிகள் மேற்கொள்ளப்படுவதில்லை என்ற விபரத்தை தெரிவித்துள்ளார்.

சுயஉதவிக்குழு பணியாளர்கள் சரிவர பணிக்கு வராததாலும், பொது சுகாதாரப்பணி பாதிக்கப்பட்ட காரணத்தினால், பேரூராட்சி மன்றத்தால் சுயஉதவிக்குழுக்களது ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்து இப்பேரூராட்சி மன்ற தீர்மான எண். 103 நாள்.19.06.2012–ன் படி தீர்மானிக்கப்பட்டு, மீண்டும் ஒரு சுயஉதவிக்குழுவை நியமனம் செய்யும் வரை, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் வரையறுக்கப்பட்ட தொகை வழங்கி பணியாளர்களை கொண்டு துப்பரவு பணி மேற்கொள்ளலாம் என தீர்மானிக்கப்பட்டதன் அடிப்படையிலேயே, தற்போது பொதுசுகாதாரப்பணி மேற்கொள்ளப்பட்டது.

இவற்றில் முறைகேடுகளோ, விதிமீறல்களோ ஏதும் இல்லை என்ற விபரத்தை தெரிவித்துள்ளார். ஆதாரமாக பேரூராட்சி மன்ற தீர்மான புத்தக நகல் இணைக்கப்பட்டுள்ளது. ஏ.ஆர்.பி.காம்ப்ளக்ஸ் கட்டிடத்திற்கு தரைதள வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடத்தின் முதல் தளத்திற்கு எண்:47/2009–10 நாள்.07.01.2010–ன் படி கட்டிட வரைபட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.26.07.2012 தேதியிலேயே கட்டி முடிக்கப்பட்டு வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது.

எந்த சூழ்நிலையிலும், அமைச்சரின் பெயரையோ உயர் அதிகாரிகளின் பெயரையோ செயல் அலுவலர் பயன்படுத்தியது இல்லை. விதிமுறைகளுக்குட்பட்டு பேரூராட்சி நிர்வாகம் நடைபெற்று வருகிறது என தெரிவித்துள்ளார்.

மேற்கூறிய சூழ்நிலையில், முறையீட்டு மனு குறித்த புகார்களுக்கு எந்த முகாந்திரமும் இல்லை. விளக்க அறிக்கைக்குரிய ஆதாரங்களின் அடிப்படையில், புகார் மனு ஆதாரமற்றது என செயல் அலுவலர் தெரிவித்துள்ளதை இம்முறைமன்றம் ஏற்கிறது.

எனவே, பெறப்பட்ட அறிக்கைகள் மற்றும் ஆவணங்கள் அடிப்படையில் மனுதாரரது குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என நிரூபணமானதால் இம்முறையீட்டினை தள்ளுபடி செய்து முற்றாக்கலாமென இம்முறை மன்றம் ஆணையிடுகிறது.

2016 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 12–ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிடப்பட்டு இவ்வாணையிடப்படுகிறது.

ஒம்/...
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக.

பெறுநர்:

செயல் அலுவலர்,
அரவக்குறிச்சி பேரூராட்சி,
கரூர் மாவட்டம் –639 201.